# ICE 2013

# INTERNATIONAL CONFERENCE OF THE EASTERN UNIVERSITY, SRI LANKA

## "Knowledge and Technology for Post-Conflict Recovery"

# CONFERENCE ABSTRACTS

12th – 13th September 2013,
Eastern University, Sri Lanka
Chenkalady-30350
Sri Lanka

Pubilished by
Eastern University, Sri Lanka.
Chenkalady - 30350.

| | |
|---|---|
| Telephone | +94(0)65 2240490 |
| Fax | +94(0)65 2240585 |
| E-mail | iceusl2013@gmail.com |

All rights reserved.
No part of this publication may be reproduced, stored in a retrival system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying or otherwise, without the prior permission of the copyright owner.

Cover Design: S.Ananthkumar
Type setting & Editing: R.Kajendran

ISSN 2345-9298
9 772345 929001

Copyright Eastern University, Sri Lanka

# யாழ் நகரில் சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிடங்கள் தொடர்பான சவால்களும் வாய்ப்புக்களும்

**V. Mathivathany and S. Uthayarasa**
Department of Geography,
University of Jaffna, Thirunelvely, Jaffna, Sri Lanka
E-mail: stpmathy@gmail.com,

## ஆய்வுச் சுருக்கம்

யாழ்ப்பாண மாவட்டமானது சுற்றுலாவுக்கான அதிகளவான வாய்ப்புக்களை கொண்டுள்ளமையால் இங்குவரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிககரித்துள்ளது. எனினும் எண்ணிக்கைக்கேற்ப தங்குமிடங்கள் இல்லாத நிலையானது யாழ் நகரில் காணப்படுவதனால் தங்குமிடம் சார்ந்த பிரச்சனைகள் ஏற்படத் தொடங்கியுள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பிற்கும், அவர்களது வசதி நிலைக்குமேற்ப அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தங்குமிடங்களை ஏற்ப்படுத்த வேண்டியள்ளது. இவ்வாய்வானது சுற்றுலாப்பயணிகள் தங்குமிடங்கள் போதியளவு இன்மையால் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பற்றி அறிவதனையும், தற்போதுள்ள தங்குமிடங்களில் காணப்படும் வசதிகள் பற்றி அறிவதனுடன் தங்குமிடம் அமைய வேண்டிய பொருத்தமான இடத்தினை இனங்காண்பதையும் நோக்கமாகக்கொண்டு மெற்கொள்ளப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுடன் கலந்துரையாடி வினாக்கொத்துக்கள் வழங்குவதனூடாகவும் பொது இடங்களில் தங்குகின்ற சுற்றுலாப் பயணிகளின் செயற்பாடுகளை அவதானிப்பதன் மூலமாகவும் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு சுற்றுலாப்பயணிகள் தங்குமிடம் தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி அறியப்பட்டுள்ளது.

எனவே சுற்றுலாத் தங்குமிடம் தொடர்பாக பல்வேறுபட்ட பிரச்சனைகள் இனங் காணப்பட்டுள்ளது. அதாவது சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, மற்றும் வசதி நிலைக்கேற்ற தங்குமிடங்கள் இல்லாத நிலை காணப்படுவதுடன் தற்போதுள்ள தங்குமிடங்கள் பொருத்தமான இடங்களில் அமையாமையால் இட அமைவு சார் பிரச்சனைகளும், தங்குமிடங்களில் காணப்படும் வசதிகள் போதியளவு இன்மையால் பல்வேறுபட்ட பிரச்சனைளும் ஏற்படுகின்றன. இவ்வாறான நிலையில் தங்குமிடங்களினை சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைக்கேற்பவும் வசதிகளுக்கேற்பவும் பொருத்தமான இடங்களில் சரியான முறையில் திட்டமிட்டு அமைக்க வேண்டிய தேவையானது காணப்படுகின்றது. யாழ் நகரில் சுற்றுலாப் பயணிகளுக்கான தங்குமிடங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது தங்குமிடம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கு வழிகாட்டலை வழங்குகின்றது. மற்றும் தங்குமிடங்களை அமைப்பவர்களுக்கு சரியான முறையில் திட்டமிட்டு, பொருத்தமான இடங்களில் தங்குமிடங்களை அமைப்பதற்கான வழிகாட்டலை வழங்கும்.

**Keywords**: சுற்றுலாத்துறை விருத்தி, பிராந்திய அபிவிருத்தி, பொதுச்சேவை செயற்பாடுகள்